தினமணி

**விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம்**

First Published : 24 Dec 2010 11:09:30 AM IST

சங்ககிரி, டிச.23: விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் சங்ககிரி வட்டார விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் கோனேரிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

காவேரிப்பட்டி, இருகாலூர், கத்தேரி, வேங்கிப்பாளையம், ஒக்கிலிப்பட்டி, மஞ்சக்கல்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். இராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறைத் தொழில் நுட்பங்கள், நெற்பயிரில் ஒருங்கிணைந்தப் பயிர் பாதுகாப்பு முறைகள், நிலக்கடலை மற்றும் பயறு வகை சாகுபடி, விதைப்பண்ணைகள், விதைச்சான்றளிப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

கோனேரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் காசிராஜன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் கே.உதயகுமார், உதவி இயக்குநர் ப.செளந்தரராஜன், வேளாண் அலுவலர் எஸ்.ரகுவீரன், விதைச்சான்று அலுவலர் சுமதி உள்ளிட்டோர் பேசினர்.

**கோழி தீவனத்தில் புரதச்சத்தை குறைக்க வேண்டும்**

First Published : 23 Dec 2010 10:27:01 AM IST

நாமக்கல், டிச. 21: கோழி தீவனத்தில் புரதச் சத்தை குறைக்க வேண்டுமென கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம்மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அடுத்த 3 நாள்களுக்கு லேசான மேகமூட்டம், மிதமான காற்றின் வேகம் கொண்ட சீதோஷ்ணநிலை நிலவும். பிற்பகலுக்குமேல் காற்றின் ஈரப்பதம் குறையும். இரவு நேர வெப்பம் குறையத் தொடங்கியுள்ளது. இந்த தட்ப வெப்பநிலையில் கோழிகளின் தீவன எடுப்பு இயல்பைவிட அதிகமாகும்.

முட்டையின் எடை கூடுதலடைய வாய்ப்புள்ளதால், கோழிகளுக்கான தீவனத்தில் புரத சத்தை 0.5 சதவீதம் என்ற அளவில் குறைத்துக் கொடுக்க வேண்டும். தீவன எடுப்பைக் கட்டுப்படுத்த 2,550 கிலோ கலோரிகள் கொண்ட தீவனத்தை கோழிகளுக்கு அளிக்க வேண்டும். கோழிகள் மீது நேரடியாக வெயில் படுவதை தடுக்க உயர்மனைகளில் படுதா அமைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கான ஆலோசனை: அதிக ஈரப்பதம், குறைந்த இரவுநேர வெப்பநிலையால் நெற் பயிரில் இலை சுருட்டுப்புழு மற்றும் குருத்துப்பூச்சி தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இப்பூச்சி

தாக்குதல் ஆரம்ப நிலையில் இருந்தால், 5 சதவீதம் வேப்பங்கொட்டைச் சாறு, கரைசலை தெளிக்க வேண்டும்.

பாதிப்பு அதிகமாக இருந்தால், தண்ணீரில் குளோரிபைரிபாஸ் அல்லது புரோப்பனோ பாஸ் -2 மி.லி., என்ற அளவில் தெளிக்க வேண்டும். கொடிவகைக் காய்கறிகளான பாகல், பீர்க்கன், சுரை, பூசணி, பரங்கி, புடலைகளில் பூக்கள் எண்ணிக்கை அதிகரிக்க, எத்ரோல் என்ற வளர்ச்சி ஊக்கியை 1 லிட்டர் தண்ணீரில் 2.5 மி.லி., என்ற அளவில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மஞ்சள் சாகுபடி விவசாயிகள் கவனத்துக்கு...**

First Published : 23 Dec 2010 09:34:36 AM IST

உளுந்தூர்பேட்டை, டிச. 22: உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு உளுந்தூர்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆர்.நிர்மலா செய்திக்குறிப்பு வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம்: தொடர்மழையின் காரணமாக மஞ்சள் பயிரில் ஆங்காங்கே வயலில் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி காணப்படுகின்றன. இதற்கு வயலில் தேங்கியுள்ள நீரை நன்கு வடித்தபின் 2 சதவீதம் டிஏபி கரைசலை இலை வழி உரமாக தெளிக்கலாம்.

மேலும் கிழங்கு அழுகல் நோயின் பாதிப்பும் வர வாய்ப்புள்ளதால், பாதிக்கப்பட்ட பயிரில் 25 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்தை (0.25 சதவீதம்) 10 லிட்டர் நீரில் கலந்து தெளித்து கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்துமாறு தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆர்.நிர்மலா கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் விவரங்களுக்கு உளுந்தூர்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளும்படி தெரிவித்துள்ளார்.

தினமலர்

புளி விலை 50 ரூபாய் உயர்வு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2010,22:42 IST

தேனி:சமையலுக்கு பயன்படும் புளியின் விலை கிலோவிற்கு 50 ரூபாய் வரை உயர்ந்து 90 முதல் 120 ரூபாய் வரை விற்கிறது. ஜனவரி முதல் மே வரை தேனி, திண்டுக்கல், சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் புளி வரத்து அதிகம் இருக்கும். மற்ற மாதங்களில் வட மாநிலங்களில் இருந்து புளி வரத்து இருக்கும்.சாதாரண ரக புளி கடந்த மாதம் கிலோ 45 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை இருந்தது. கறிப்புளி 60 ரூபாய் முதல் 75 ரூபாய் வரை இருந்தது. தற்போது, சாதாரண புளி 90 ரூபாயாகவும், கறிப்புளி 120 ரூபாயாகவும் விற்கப்படுகிறது.வரத்து குறைவால் இந்தவிலை உயர்வு எனவும், சமையலுக்கு மிகவும் குறைந்த அளவே பயன்படுத்துவதால் புளியின் விலை உயர்வு பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை எனவும், ஜனவரி இறுதியில் வரத்து தொடங்கி விடும். புதுபுளி மார்க்கெட்டிற்கு வந்தால் விலை குறையும் எனவியாபாரிகள் தெரிவித்தனர்.

**அழகு கொஞ்சும் ""ஆழியாறு"**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2010,00:00 IST



கோவை: மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், அங்குள்ள சிற்றாறுகள், நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன. இதனால், சோலையாறு அணை, பரம்பிக்குளம் அணை, ஆழியாறு அணை, திருமூர்த்தி அணை உள்ளிட்ட அணைகள் நிரம்பிவிட்டன. ஆழியாறு அணையின் நீர்மட்டம் 120 அடி. தற்போது, 119 அடி நீர் உள்ளது. பசுமை படர்ந்த மலைகள் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ள ஆழியாறு அணை, நீர் நிரம்பியுள்ளதால் ரம்மியமாக காட்சியளிக்கிறது. மலைப்பாதையில் செல்லும் சுற்றுலாப் பயணிகள், வாகனங்களில் இருந்தபடியே ஆழியாறின் அழகைக் கண்டு ரசித்தபடி செல்கின்றனர். மழைப் பொழிவு குறைந்த போதும்,மலையருவிகளில் இருந்து விழும் நீரால், ஆழியாறு அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகமாக உள்ளது.

**விரட்டிய வானிலை பயிர் காப்பீடு அதிகாரி:விவசாயிகள் வெளிநடப்பு செய்து ரகளை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 24,2010,22:57 IST

விருதுநகர்:விருதுநகரில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் அதிகாரி தரக்குறைவான பேச்சால், விவசாயிகள் வெளி நடப்பு செய்து வானிலை பயிர் காப்பீடு திட்டத்தில் மோசடி நடந்துள்ளதாக புகார் தெரிவித்தனர்.விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மகளிர் திட்ட பயிற்சி அரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், விவசாய இணை இயக்குனர் பாண்டியராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெயம்பாண்டியன் தலைமையில் நடந்தது.

மத்திய அரசின் வானிலை பயிர் காப்பீடு திட்டத்தில், இதுவரை இழப்பீடு வழங்கவில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். " 2009ம் ஆண்டு ராபி பருவத்திற்கான அவகாசம் ஆகஸ்டு வரை மட்டுமே' என வானிலை பயிர் காப்பீடு அதிகாரி சீனிவாசன் தெரிவித்தார். இதற்கு விவசாயிகள், "2010 ஜனவரியில் விஜயகரிசல்குளம் விவசாயி கோவிந்தராஜிடம், பிரீமியம் வசூலிக்கப்பட்டுள்ளது. வங்கிகள் ஏன் வசூல் செய்தன. எனவே, உடனே இழப்பீடு வழங்க வேண்டும். அல்லது பிரீமியத்தொகையை வட்டியுடன் வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

"இழப்பீடு தர முடியாது' என தெரிவித்த சீனிவாசனிடம், "இனி எப்படி நம்பி காப்பீடு செய்ய முடியும்' என விவசாயிகள் கேட்டனர். இதற்கு சீனிவாசன், "காப்பீடு செய்தால் செய்யுங்கள், இல்லை என்றால் வெளியே செல்லுங்கள்' என தெரிவித்தார்.கோபமடைந்த விவசாயிகளுக்கு, அதிகாரிகளுக்கும் வாக்குவாதம் முற்றி, தள்ளுமுள்ளு ஏற்பட்டது. உடனே விவசாயிகள் சங்கத்தினர் வெளி நடப்பு செய்து சீனிவாசனை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். கூட்டத்தை நடத்தவிடாமல் ரகளையில் ஈடுபட்டனர்.

கலெக்டர் வி.கே. சண்முகம், கணேசன் டி.ஆர்.ஓ., ஆகியோர் விவசாயிகளை சமரசம் செய்து கூட்டத்தை தொடர்ந்தனர். இச்சம்வத்தால் காலை 11.30 முதல் மதியம் 12.30 மணி வரை கூட்டம் நடக்கவில்லை.தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் விஜய முருகன் கூறியதாவது: வானிலை பயிர் காப்பீட்டு திட்டத்தில் பயிர்க்கடன் பெற்ற, பெறாத விவசாயிகள் பிரீமியம் தொகை செலுத்தினர். காலக்கெடு முடிந்தும் வங்கி அதிகாரிகள் ஏன் பணத்தை பெற வேண்டும். இதில் மோசடி நடந்துள்ளது. விசாரணை நடத்த வேண்டும், என்றார்.

**ஆடுகளுக்கு மர்ம நோய்: மருத்துவக்குழு சிகிச்சை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,00:52 IST

சிறுபாக்கம்:சிறுபாக்கம் பகுதிகளில் மர்ம நோய்தாக்குதலுக்குண்டான ஆடுகளுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்படுகிறது.சிறுபாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் ஆடுகள் வளர்த்து வருகின்றனர். அண்மையில் பெய்த கன மழையால் தேங்கி நின்ற நிலங்களில் மேய்ச்சலுக்குச் சென்ற ஆடுகளை மர்ம நோய் தாக்கியது. இதில் 70க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்தன. இதனைத் தொடர்ந்து கால்நடை நோய் நுண்ணறிவு புலனாய்வு துறை உதவி இயக்குனர் ராமமூர்த்தி தலைமையில் மருத்துவக் குழுவினர் சிறுபாக்கம் பகுதியில் முகாமிட்டு ஆடுகளின் ரத்த மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.தொடர்ந்து டாக்டர்கள் அனிதா, திலகவதி, நந்தகோபால், கண்மணி, கார்த்திகேயன், சுப்ரமணியன் குழுவினர் தடுப்பூசி மற்றும் மருந்து மாத்திரைகளை வழங்கி நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,03:52 IST

சின்னசேலம்:சின்னசேலம் மார்க்கெட் கமிட்டியில் மக்காசோளம் வரத்து அதிகரித்துள்ளது.சின்னசேலம் பகுதியை சுற்றியுள்ள 40 கிராமங்கள் மற்றும் சேலம், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம விவசாயிகள் சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு விவசாய விளைபொருட்களை விற்பனைக்குச் கொண்டு வருகின்றனர். கடந்த 40 நாட்கள் பெய்த மழைக்கு பிறகு சில தினங்களாக சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம் வரத்து அதிகரித்துள்ளது.

**எண்ணெய் விதை உற்பத்தி திட்டப் பணிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,03:05 IST

சேலம்: தேசிய எண்ணெய் விதைகள் உற்பத்தி திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் புங்கன், இலுப்பை மரங்களின் விதைகள் நடவு செய்யப்பட்டு, நன்கு வளர்ந்த செடிகளை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திண்டுக்கல், சேலம் மாவட்டத்தில் மட்டுமே இலுப்பை, புங்கன் விதைகளை நடவு செய்யப்பட்டுள்ளது. இச்செடிகள் மாவட்ட வன விரிவாக்க மையத்தினர் சார்பில் பராமரிக்கப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ் பொள்ளாச்சியில் இருந்து 3,000 இலுப்பை விதைகளும், தேன்கனிக்கோட்டையில் இருந்து 1,500 புங்கன் விதைகளும் வரவழைக்கப்பட்டு, சேலம் சித்தர் கோவிலில் உள்ள நிலத்தில் நடவு செய்யப்பட்டது. 45 ஏக்கரில் நடவு செய்யப்பட்ட பணிகளை, புதுடில்லியின் தேசிய எண்ணெய் விதைகள் உற்பத்தி மைய ஆய்வாளர் வீரேந்திரகுமார் நேற்று ஆய்வு செய்தார்.விதைகள் நடப்பட்ட விதம் குறித்தும், பாதுகாக்க வேண்டிய முறைகள் குறித்தும் அதிகாரிகளிடம் கூறினார். விதைகளை முறையாக

பராமரித்து, விவசாயிகளிடம் வீரிய எண்ணெய் வித்துக்கள் உள்ள புங்கன், இலுப்பை செடிகளை வழங்குமாறு அறிவுறுத்தினார். அப்போது வன விரிவாக்க மைய அதிகாரி அசோகன், வனச்சரகர் சத்யமூர்த்தி உள்ளிட்ட வனத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

**மஞ்சள் பயிர் பாதுகாப்பு குறித்த ஆலோசனைகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,03:51 IST

உளுந்தூர்பேட்டை:மஞ்சள் பயிர் பாதுகாப்பு குறித்து வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார்.உளுந்தூர்பேட்டை தோட் டக்கலை உதவி இயக் குனர் நிர்மலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள மஞ்சள் பயிரில் தொடர் மழையின் காரணமாக ஆங்காங்கே வயலில் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி உள் ளது. இப் பயிரை பாதுகாக்க வயலில் தேங்கியுள்ள நீரை நன்கு வடித்தபின் 2 சதம் டிஏபி., கரைசலை இலை வழி உரமாக தெளிக்கவும்.மேலும் கிழங்கு அழுகல்நோயின் பாதிப்பும் வர வாய்ப்புள்ளதால் பாதிக்கப்பட்ட பயிரில் 25 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு மருந்தை(2.25 சதம்) 10 லிட்டர் நீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**வெள்ள நிவாரணம் போதாது: விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,00:40 IST

கடலூர்:வெள்ளத்தால் பாதித்த நிலங்களுக்கான நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் மாவட்ட வளர்ச்சி மன்ற கூடத்தில் நடந்தது. கலெக்டர் சீத்தாராமன் தலைமை தாங்கினார். வேளாண் துணை இயக்குனர் இளங்கோவன், மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் ரகுராம், கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மணி உட்பட பலர் பங்கேற்றனர்.

விவசாயி ரவீந்திரன்: வெள்ள பாதிப்பு கணக்கெடுப்பு பணி திருப்தியாக இல்லை. 50 சதவீதத்திற்கு மேல் பாதிப்பு இருந்தால் மட்டுமே நிவாரணம் எனக் கூறுவது சரியில்லை. தண்ணீரில் மூழ்கிய பயிர்கள் தற்போது பார்ப்பதற்கு பசுமையாக இருந்தாலும் அறுடை நேரத்தில் பதராக இருக்கும். மேலும் பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது.விதை உளுந்துகளை போதிய அளவில் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தட்சணாமூர்த்தி: திருமாணிக்குழியில் நிரந்தரமாக உயர்மட்ட பாலம் கட்ட வேண்டும்.கலெக்டர்: வெள்ள பாதிப்பால் மண்மேடான 472 ஏக்கர் நிலங்களை மேம்படுத்த மத்திய அரசிடம் தனியாக நிதி கேட்கப்பட்டுள்ளது.கோபாலகிருஷ்ணன்: வாழை பொருட்களை கொள்முதல் செய்பவர்கள் குறைவான விலைக்கு கேட்கின்றனர்.கலெக்டர்: உழவர் சந்தையில் வாழைக்காய், இலை

ஆகியவற்றை விவசாயிகள் ஏலம் விட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.கூட்டத்தில் பேசிய அனைத்து விவசாயிகளும் வெள்ள நிவாரணத்தை உயர்த்தித் தர வேண்டும் என வலியுறுத்தினர்.

கலெக்டர் திட்டவட்டம்:ஒவ்வொரு ஆண்டும் பரவானாறு, செங்கல் ஓடையில் உடைப்பு ஏற்படுவதை தவிர்க்க நிரந்தர தீர்வாக ஆறு மற்றும் வாலாஜா, பெருமாள் ஏரிகளை தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.உடன் கலெக்டர் வாலாஜா, பெருமாள் ஏரிகளை தூர் வார வேண்டுமென்றால் ஒரு போகம் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்படும். ஏரிகளில் உள்ள தண்ணீரை முழுவதும் வெளியேற்றிய பின் பணிகள் மேற்கொண்டால் தான் நிரந்தர தீர்வாக இருக்கும். இதற்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு அளித்தால் மட்டுமே தூர்வார முடியும் என கலெக்டர் சீத்தாராமன் திட்டவட்டமாக தெரிவித்தார். விவசாயிகளும் ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதியளித்தனர்.

**வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சின்னவெங்காயம் விற்பனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,02:49 IST

நாமக்கல்: நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உள்ள ரேஷன் கடையில் சின்னவெங்காய விற்பனை நேற்று துவங்கியது. கிலோ 25 ரூபாய் வீதம் ஒரு நபருக்கு அதிகபட்சமாக நான்கு கிலோ வரை வழங்கப்படுகிறது.கடந்த ஒரு மாத காலமாக காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. குறிப்பாக பெரிய வெங்காயம், சின்னவெங்காயம் ஆகியவற்றின் விலை கடும் ஏற்றம் கண்டுள்ளது. இவ்விலையேற்றத்தால் அனைத்துதரப்பு மக்களும் கடும் பாதிப்பிற்குள்ளாகினர். நிலைமை சீர் செய்ய கூட்டுறவு சங்கங்களில் உள்ள ரேஷன் கடைகளில் சின்னவெங்காயம் விற்பனை செய்ய அரசு முடிவு செய்தது.

அதன்படி நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உள்ள ரேஷன் கடையில் சின்னவெங்காயம் விற்பனை செய்வதற்காக விவசாயிகளிடம் இருந்து ஒன்றரை டன் சின்னவெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்கான விற்பனை நேற்று துவங்கியது.கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சீனிவாசன் தலைமை வகித்து முதல் விற்பனையை துவங்கி வைத்தார். கிலோ 25 ரூபாய் வீதம் ஒரு நபருக்கு அதிகபட்சமாக நான்கு கிலோ வரை வழங்கப்படும் என, தெரிவிக்கப்பட்டது. இதுபோல் மாவட்டத்துக்கு உட்பட்ட திருச்செங்கோடு, ராசிபுரம் ஆகிய ரேஷன் கடைகளிலும் சின்னவெங்காயம் விற்பனை செய்யப்படுகிறது. பொதுமார்க்கெட்டில் வெங்காயத்தின் விலை சீரடையும் வரை, இவ்விற்பனை ரேஷன் கடையில் நீடிக்க உள்ளது.விழாவில் கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர்கள் தனலட்சுமி,

அருளரசு, ஆதிநாயகி, எழிலரசி, செயலாளர்கள் பழனிச்சாமி, சீனிவாசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மானிய விலையில் வேளாண் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,02:33 IST

தர்மபுரி: தர்மபுரி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.தர்மபுரி வேளாண்மை உதவி இயக்குனர் முருகேசன் வெளியிட்ட அறிக்கை:தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் மாநில அளவில் செயல்படுத்தும் திட்டம் மூலம் முக்கியமான உணவுப் பயிரான நெல் மற்றும் எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை, சூரியகாந்தி, எள் ஆகியவற்றுக்கு தேவைப்படும் இடுபொருட்களான ஜிங்சல்பேட், ஜிப்சம் ஆகியவை விவசாயிகளுக்கு மானிய விலையில் தர்மபுரி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது.நெல் பயிருக்கு ஏக்கருக்கு தேவையான 10 கிலோ ஜிங்சல்பேட்டை 50 சதவீத மானியத்திலும், எண்ணெய் வித்து பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான 160 கிலோ ஜிப்சம் 300 ரூபாய் மானியமாக வழங்கபடுகிறது.ஜிங்சல்பேட் இடுபொருளை நெல் பயிர்களுக்கு நடவுக்கு முன் கடைசி உழவின் போது இடவேண்டும். இதனால், நெல்பயிர்களில் காணப்படும் நுண்ணூட்டச் சத்துக்கள் பற்றாக்குறை சரி செய்வதுடன், தரமான நெல் விதைகள் கிடைக்கும்.எண்ணெய்வித்து பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான ஜிப்சம் 160 கிலோவை இரண்டாக பிரித்து 50 சதவீதம் அடியுரமாகவும், மீதமுள்ள 50 சதவீதம் மேலுரமாக விதைத்து 45வது நாள், செடிகளுக்கு மண் அணைக்கும் போது இட வேண்டும்.இடுபொருட்கள் எண்ணெய்வித்துப் பயிர்களில் தாவரங்களுக்கு தேவையான சுண்ணாம்பு மற்றும் கந்தக சத்துக்களை அளிப்பதுடன், திடமான மற்றும் நன்கு முதிர்ந்த திரட்சியான காய்களை உருவாக்கும். பொட்டு காய்களின் உருவாக்கத்தை கட்டுப்படுத்தும். தரமான விதை உருவாக்கத்திற்கு ஜிப்சம் மற்றும் ஜிங்சல்பேட்டை இடுபொருளாக பயன்படுத்துவது அவசியம்.விவசாயிகள் பயிர்களுக்கு தேவையான இடுபொருள்களை பெற்று பயன்பெறலாம்.

**ரூ.9.94 லட்சத்துக்கு கொப்பரை வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,02:42 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்தில், 9.94 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை வர்த்தகம் நடந்தது.ஏலத்துக்கு கொப்பரை வரத்து அதிகரித்திருந்தது. மயில்ரங்கம், அரவக்குறிச்சி, விளாத்திக்குளம், வாணியம்பாடியை சேர்ந்த 58 விவசாயிகள், 420 மூட்டை கொப்பரையை கொண்டு வந்திருந்தனர்.முதல் தரம் 55.30 ரூபாய்;

இரண்டாம் தரம் 38.95 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. 18 வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். 9.94 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.வெள்ளகோவில் பகுதிகளில் திடீர் திடீரென பெய்து வந்த மழை, தற்போது ஓய்ந்துள்ளதால், அடுத்த வாரம் வரத்து அதிகரிக்கும், என்றனர் விவசாயிகள்.

**வெங்காயம் விலை குறைகிறது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,01:21 IST

கோவை: கடந்த சில வாரங்களாக உச்சத்தில் இருந்த வெங்காயத்தின் விலை, நேற்று சிறிதளவு குறைந்துள்ளது. கோவை, தியாகி குமரன் மார்க்கெட்டில் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை கடந்த சில வாரங்களாக 50 ரூபாய்க்கும் மேல் விற்பனையானது. நேற்று முன்தினம் ஒரு கிலோ 45 முதல் 52 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று 5 ரூபாய் குறைந்து 40 ரூபாய் முதல் 47 ரூபாய் வரை விற்பனையானது. டி.கே. மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் சங்க பொருளாளர் கார்த்திகேயன் கூறுகையில், ""வெங்காயத்தின் வரவு தற்போது ஓரளவு அதிகரித்துள்ளதால், இன்று (நேற்று) கிலோவுக்கு 5 ரூபாய் குறைந்துள்ளது. வெங்காயம் வரவு அதிகரிக்கும்போது, இன்னும் விலை குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

**பருத்தி வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,01:24 IST

அன்னூர்: அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடந்த வாராந்திர பருத்தி ஏலத்தில் வரத்து அதிகரித்தது. நேற்று முன் தினம் நடந்த ஏலத்தில் போல்கார்டு ரக பருத்தி 525 மூட்டை ஏலத்துக்கு வந்தது. 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். குறைந்தபட்சமாக ஒரு குவிண்டால் 4,200 ரூபாய் முதல் அதிகபட்சமாக 4,560 ரூபாய் வரை விலை போனது. பருத்தி வரத்து கடந்த வாரத்தைவிட அதிகரித்துள்ளதாக, கண்காணிப்பாளர் ரமேஷ்குமார் தெரிவித்தார்.

**மரவள்ளி விலை சரிவால் கவலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,01:33 IST

பொங்கலூர்:பொங்கலூர் பகுதியில், 500 ஏக்கரில் மரவள்ளி பயிரிடப்பட்டுள் ளது. கடந்தாண்டு மரவள்ளி கிழங் குக்கு நல்ல விலை கிடைத்ததாலும், பத்து மாத பயிரான இதற்கு குறைவான ஆட்கள் தேவைப்படுவதாலும், பல விவசாயிகள் மரவள்ளி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டினர். இது, ஆண்டு முழுவதும் பயிரிடப்படுகிறது. வைகாசியில் சாகுபடி செய்யும் மரவள்ளி, மாசி மற்றும் பங்குனியில் அறுவடை செய்யப்படும். இந்தாண்டு நல்ல மழை பெய்ததால், மரவள்ளி பயிர் செய்யப்பட்டுள்ள பல இடங்களில் நீர் தேங்கியுள்ளது. அதிக ஈரப்பதம் காரணமாக, கிழங்கு அழுக வாய்ப்புள்ளது என்பதால், பல விவசாயிகள் முன்கூட்டியே அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளனர். விவசாயிகள் பலர், ஒரே நேரத்தில் அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளதால், வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்குகின்றனர். கடந்தாண்டு ஒரு டன் மரவள்ளி கிழங்கு 5,000 ரூபாய் முதல் 7,000 ரூபாய் வரை விற்பனையானது. இந் தாண்டு மழை ஆரம்பிப்பதற்கு முன், ஒரு டன் 4,500 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, 2,500 ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர். விலை குறைவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பெல்லாரி வெங்காயம் விலை சரிவு: மக்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,01:35 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி சந்தையில், பெல்லாரி வெங்காயம் விலை கிலோவுக்கு 30 ரூபாய் சரிந்துள்ளதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தியாவில், கர்நாடகா, மகாராஷ்டிரா பகுதிகளிலிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பெல்லாரி வெங்காயம் வரத்துள்ளது. வடகிழக்கு பருவமழை சீசன் காரணமாக, வட மாநிலங்களில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயம் அதிகளவில் சேதமடைந்தது.இதனால், பொள்ளாச்சி உட்பட பல்வேறு சந்தைக்கும் பெல்லாரி வெங்காயம் வரத்து குறைந்தது. வழக்கமாக உள்ள வரத்தை விட இரு வாரங்களில் 10 டன்னாக குறைந்தது. போதிய வரத்து இல்லாததால், பெல்லாரி வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 80 ரூபாய் வரை விலை போனது. மொத்த வர்த்தகத்தில், விற்பதை விட சில்லரை வர்த்தகத்தில் இவற்றின் விலை கிலோவுக்கு 10 ரூபாய் உயர்ந்து காணப்பட்டது. மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பெல்லாரி வெங்காயத்தின் விலையேற்றத்தினால், விற்பனை ஒரே வாரத்தில் 50 சதவீதம் குறைந்தது. பொள்ளாச்சி மட்டுமின்றி இந்தியா முழுவதும் பெல்லாரி வெங்காயத்தின் விலை ஏறுமுகமாக இருந்தது. இந்நிலையில், வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதி தடைசெய்யப்பட்டது. வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதி தடை செய்யப்பட்டதால், தமிழகத்தின் பல்வேறு பகுதிக்கு இரு நாட்களாக வெங்காய வரத்து 10 சதவீதம் அதிகரித்துள்ளது. வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளதால், இரு நாட்களில் விலையில் 30 ரூபாய் சரிந்துள்ளது. பொள்ளாச்சி மொத்த வரத்தகத்தில், ஒரு கிலோ பெல்லாரி வெங்காயம் 40 ரூபாய் வரையும், சில்லரை வர்த்தகத்தில், 50 ரூபாய்க்கும் விற்றது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் வியாபாரிகள்

கூறியதாவது: பெல்லாரி வெங்காயத்தில், மகாராஷ்டிரா சீசன் துவங்கியுள்ளதால் வரத்து அதிகரிக்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால், பருவமழை காரணமாக பயிர்கள் சேதமடைந்து விளைச்சல் குறைந்தது. ஒரு வாரமாக சந்தைக்கு 50 கிலோ எடையுள்ள 200 மூட்டைகள் வீதம் 10 லோடு வெங்காயம் மட்டுமே வரத்தாக இருந்தது. இதில், கேரளாவுக்கு 5 லோடு அனுப்பப்படுகிறது. தற்போது, மேலும் மூன்று லோடு வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விலையில் சரிவு ஏற்பட்டு 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனையாகிறது. வரும் வாரங்களில், வெங்காயம் வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், விலையில் சரிவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, என்றனர்.

**"பனியன் தொழில் வளர்ச்சியால் நாட்டுக்கோழி வளர்ப்பு குறைவு'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,01:05 IST

திருப்பூர்:நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த சிறப்பு பயிற்சி முகாம், திருப்பூர் கால்நடை ஆராய்ச்சி மற்றும் பல்கலையில் நடந்தது.டாக்டர் செல்வராஜ் பேசியதாவது:பனியன் தொழில் வளர்ச்சியால், நாட்டுக்கோழி வளர்ப்பு திருப்பூரில் குறைந்து விட்டது. முன்பு முதியவர்கள் மட்டுமாவது இத்தொழிலில் ஈடுபட்டு வந்தனர். தற்போது, இடப்பற்றாக்குறை, பராமரிக்க முடியாமை போன்ற காரணங்களால் வளர்ப்பாளர்கள் சதவீதம் குறைந்து விட்டது. இதை கைத்தொழிலாக மாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.ஒன்றரை கிலோ கொண்ட நாட்டுக்கோழியை ஆண்டு முழுவதும் நன்கு பராமரித்தால், 40 முட்டைகள் கிடைக்கும். இதன் மூலம் குறைந்தது, 30 குஞ்சுகள் வளர்க்கலாம். இவை அனைத்தும் சேர்த்து ஓராண்டுக்கு 40 கிலோ கோழி கிடைக்கும். ஒரு கோழி ஒரு ஆண்டில் நாற்பது கோழிக்கு சமம். பண்ணை கோழிகள் குறுகிய காலத்தில் விற்பனைக்கு தயாராவதால், அதன் வளர்ப்பு மிக அதிகரித்துள்ளது.நாட்டுக்கோழிகள், உடலில் உள்ள சூட்டை தணிக்கும்; இயற்கையான முறையில் வளர்க்கப்படுவதும் கூட. நாட்டுக்கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு, தடுப்பூசிகளை வீட்டிலேயே போட ஏதுவாக, இறக்கையில் போடக்கூடிய ஆர்.டி.வி.கே., தடுப்பூசி போட பயிற்சி அளிக்கப்படுகிறது.ஒரு கூண்டில் 20 கோழிகள் மட்டுமே வளர்க்க வேண்டும். மற்ற நோய்களை தடுப்பூசி மூலம் குணப்படுத்தி விடலாம். "கொக்கு' நோய் ஒரு கோழியை தாக்கினாலும், அனைத்தையும் அழித்து விடும். எனவே, இதற்கான தடுப்பூசியை தவறாமல் போட வேண்டும், என்றார்.கால்நடை வளர்ப்பாளர்கள் கூறுகையில், "நாட்டுக்கோழி வளர்ப்பு லாபம் தந்தாலும், வளர்ப்பதற்குள் சோளம், கம்பு உள்ளிட்ட தானிய விதைகளை கோழிகள் தின்று விடுகின்றன. இதனால், நஷ்டமும் ஏற்படுகிறது,' என்றனர்.தாராபுரம், கருமத்தம்பட்டி, அவிநாசி, சுல்தான்பேட்டை, காங்கயம், பல்லடம், சோமனூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் பங்கேற்றனர்.

**பந்தல் விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,01:06 IST

திருப்பூர்:தொடர் மழை காரணமாக, பந்தல் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர். தோட்டக்கலைத்துறையினர், பாதிப்பை கணக்கீடு செய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
திருப்பூர் மாவட்டத்தில் பெய்த வட கிழக்கு பருவ மழையால் பந்தல் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெங்காயம், தக்காளிக்கு அடுத்தபடியாக, பந்தல் காய்கறி விலை உச்சத்தில் இருக்கிறது. புடலை முழு அளவிலும், பாகல், அவரை 50 சதவீதத்துக்கு மேலாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. மழையால் பாதிக்கப்பட்ட பயிரை அகற்றி விட்டு, புதிதாக பாகல் நடுவதற்கான பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.விவசாயிகள் கூறுகையில், "பீர்க்கன், புடலை, அவரை, பாகல் ஆகிய பந்தல் காய்கறிகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து 40 நாள் மழைபொழிவு இருந்ததால், சேதம் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. புடலை சிப்பம் 320 ரூபாய், அவரை 350 ரூபாய்; பாகல் 200 ரூபாய் வரை விற்கிறது. விளைச்சல் பாதித்ததால், நல்ல விலை கிடைக்கிறது. புடலை முற்றிலும் சேதமாகி விட்டது; அவரை உள்ளிட்டவை 50 சிப்பத்துக்கு 20 சிப்பம் விளைச்சல் கிடைத்துள்ளது.ஏக்கருக்கு 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை செலவிடப்பட்டது. இதில், 15 ஆயிரம் ரூபாய் வரை கிடைத்தது. சேதமடைந்த செடிகளை நீக்கிவிட்டு, தொடர்ந்து பாகல் பயிரிட உழவு பணி நடக்கிறது. திருப்பூர் சுற்றுப்பகுதி தவிர, மாவட்டத்தில் பரவலாக பாதிப்புள்ளது. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், பந்தல் காய்கறி பயிர்களின் சேதத்தை கணக்கிட்டு, உரிய நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்,' என்றனர்.

**மழைபாதித்த நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.15,000 நிவாரணம் வழங்க வேண்டும்:விவசாய கூட்டத்தில் முடிவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,03:37 IST

திருச்சி: திருச்சி கலெக்டர் அலுவலக வளாகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. இதில் மாவட்ட கலெக்டர் மகேசன் காசிராஜன், வேளாண்துறை இணை இயக்குனர் சேகர், கலெக்டரின் வேளாண்துறை நேர்முக உதவியாளர் ராமசாமி, மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் வெங்கட்ராமன் மற்றும் பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.கூட்டத்தில், பேசிய அனைத்து விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும் சமீபத்தில் பெய்த தொடர்மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும் என்பதையே முக்கிய கோரிக்கையாக வைத்தனர்.பாரதிய கிஷான் சங்க மாநில

பொதுச்செயலாளர் அய்யாக்கண்ணு கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:மழையால் பாதிக்கப்பட்ட நெல்லுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும், வாழை, வெங்காயத்துக்கு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கவேண்டும் என்று கேட்டோம். ஆனால் முதல்வர் கருணாநிதி நெல்லுக்கு ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாயும், வாழை, வெங்காயத்துக்கு ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாயும் வழங்குவதாக கூறுகிறார். இது விவசாயிகளை அழிக்க சமம். எனவே பாரதிய கிஷான் சங்க கோரிக்கையை ஏற்று முதல்வர் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும். அய்யாற்றில் வீணாகும் நீரை மங்கலம் ஏரிக்கும், திருத்தியமலை ஏரிக்கும் திருப்பிவிட்டு தா.பேட்டை, முசிறி ஆகிய பகுதிகளில் உள்ள 75 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயனடைய கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயம் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாய கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்யவேண்டும்.தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மாசிலாமணி அளித்த மனு:மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தை உயர்த்தி தந்து, பயிர்கடன்களையும் தள்ளுபடி செய்யவேண்டும். மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள எஸ்.சி., காலனி, இந்திரா குடியிருப்பு, தொகுப்பு வீடு ஆகியவற்றுக்கு பதிலாக புதிய வீடு கட்டி தரப்பட வேண்டும். குறைவாக பழுதடைந்துள்ள வீடுகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும்.காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்கத்தின் தலைவர் கனகசபை அளித்துள்ள மனு:அண்மையில பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம், விவசாய கடன் தள்ளுபடி, கால்நடை தீவனத்துக்கு மான்யம், மழையால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு, நெல், கரும்புக்கு கூடுதல் விலை, மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பனிடுதல், நிலப்பட்டா தனித்தனியாக வழங்குதல், தடுப்பு அணை கட்டுதல், கொள்ளிடம், காவிரியில் மணல் எடுப்பது தவிர்ப்பு ஆகியவற்றை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் விசுவநாதன் அளித்த மனு:மழையால் பாதிக்கப்பட்ட நெல், பருத்தி, மஞ்சள், குச்சிவள்ளிகிழங்கு, வாழை ஆகியவற்றுக்கு உரிய நிவாரணம், மழையால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்கு கட்சி பாகுபாடின்றி உரிய நிவாரணம், மாவட்டத்தில் உள்ள 96 ஏரி, குளங்களை சீரமைப்பது, நெல்கொள்ளுதல் விலையை குவிண்டாலுக்கு 1,500ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.இதேபோல், கிஷான் கீத் மஸ்தூர் காங்கிரஸின் மாநில துணைத்தலைவர் புலியூர் நாகராஜன், தெற்கு மற்றும் வடக்கு அய்யன் வாய்க்கால் பாசனதாரர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வீரசேகரன் ஆகியோரும் கலெக்டரிடம் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர்.

**உரத்தை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,02:42 IST

லாலாப்பேட்டை: "உரத்தை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என கிருஷ்ணராயபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் உள்ள சில்லரை உரம் மற்றும் மற்றும் பூச்சி மருந்துகள் விற்பனை மையங்களில் பெரும்பாலான விற்பனை உரிமங்கள் இம்மாதம் இறுதியில் காலாவதி ஆகிறது.இதனால் அனைத்து உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்கள் உரிய கட்டணம், உரிய கணக்கு தலைப்புகளில் செலுத்தி விண்ணப்பத்துடன் ரசீதும் இணைத்து உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.விற்பனை உரிமமின்றி பூச்சி மருந்து விற்பனை செய்து வந்தால் இருப்பில் உள்ள இடுபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உரம் மற்றும் பூச்சி மருந்துகள் வாங்கும் விவசாயிகளுக்கு விற்பனை ரசீது கண்டிப்பாக வழங்க வேண்டும்.இருப்பில் உள்ள பொருட்கள் விபரம், அளவு, விலை போன்றவற்றுடன் விளம்பரபலகையில் எழுதி அனைவரின் பார்வைக்கும் தெரியும்படி வைக்க வேண்டும். உரங்களை பதுக்கி வைத்து விற்பதோ அல்லது கூடுதல் விலைக்கு விற்றாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**விவசாயிகளுக்கு 7 நாள் பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,02:43 IST

குளித்தலை: குளித்தலை வேள ோண் பொறியியல் துறை மற்றும் புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம் இணைந்து விவசாயிகளுக்கு கருவிகள் பயன்பாடு குறித்து ஏழுநாள் பயிற்சி வரும் 27ம் தேதி துவங்குகிறது.குளித்தலை, தோகமலை, கடவூர், கிருஷ்ணராயபுபுரம் பகுதி விவசாயிகள் விவசாய கருவிகள் தேர்வு, பயன்பாடுகள் குறித்து வரும் 27ம் தேதியிலிருந்து தொடர்ந்து ஏழு நாட்கள் புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் நடக்கிறது. பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் குளித்தலை வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர், புழுதேரி சரஸ்வதி வேளாண் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநரிடம் பெயரை பதிவு செய்துக்கொள்ளலாம்.

**எண்ணெய்வித்து மரங்கள் வளர்ப்பதால் வேலைவாய்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,03:18 IST

மதுரை:""தமிழகத்தில் தரிசு நிலங்களில் எண்ணெய் வித்து மரங்கள் வளர்ப்பதால் வருவாய், வேலைவாய்ப்பு பெருகும்,'' என தேசிய எண்ணெய் வித்துக் கழக (நவாட்) உதவி இயக்குனர் வீரேந்திரகுமார் கூறினார்.பருவநிலை மாற்றம், பூமி வெப்பமயமாதலால் விவசாயத்தில் போதிய

வருவாய் கிடைக்கவில்லை. இதனால், தமிழகத்தில் தரிசு நிலம் அதிகரித்துள்ளது. இவற்றில் தகுந்த மரங்கள் வளர்ப்பதால் வருமானம் பெறுவதோடு, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

மத்திய விவசாயத்துறையின் "நவாட்' அந்தந்த மண்ணுக்கேற்ற எண்ணெய் வித்து மரங்களான வேம்பு, புங்கன், இலுப்பை மரங்கள் வளர்க்க ஊக்குவிக்கிறது."நவாட்' உதவியுடன், வனத்துறை மதுரை வன விரிவாக்கப் பிரிவின் சிவகங்கை மாவட்டம் அரசனூரில் 52.5 ஏக்கர், திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய பல்கலையில் 25 ஏக்கரில் வேம்பு, இலுப்பை, புங்கன் மரங்களின் மாதிரித்தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதை வீரேந்திரகுமார் ஆய்வு செய்தார்.

மதுரையில் அவர் கூறியதாவது:தமிழகத்திற்கு ஏற்ற வேம்பு, புங்கன், இலுப்பை மரங்களை விவசாயிகள் வளர்ப்பதால் விதைகள் தர துவங்கியதிலிருந்து அதிக வருவாய், மறைமுக வேலைவாய்ப்பு தருகிறது. இம்மரங்களின் இலை, பட்டைகள் மருத்துவ குணம் கொண்டவை.எண்ணெய் தருவதோடு, அதன் புண்ணாக்கு விவசாயத்திற்கு, கால்நடைகளுக்கு பயன்படுகிறது. இத்தகைய மரங்களை வளர்க்க வன விரிவாக்க மையங்களை அணுகலாம் என்றார். மதுரை வன விரிவாக்க அலுவலர் ராஜசேகரன் உடனிருந்தார்.

**வேளாண் விளைபொருள் அங்காடி அமைக்கநிபந்தனை:33 ஆண்டுக்கு இடம் தருகிறது**

**மாநகராட்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,03:17 IST

மதுரை:வேளாண் விளைபொருள் அங்காடி அமைக்க, அவனியாபுரத்தில் உள்ள 11.4 ஏக்கர் இடத்தை நிபந்தனைகளுடன் மதுரை மாநகராட்சி தர உள்ளது.அவனியாபுரத்தில் மாநகராட்சிக்கு சொந்தமாக 11.4 ஏக்கர் இடம் இருக்கிறது. லாரி ஸ்டாண்ட் அமைக்க இந்த இடத்தை தனது செலவில், மாநகராட்சி சமப்படுத்தி தயார் செய்து வைத்திருந்தது. இங்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் வேளாண் விளைபொருள் அங்காடி அமைக்க, மாநகராட்சியை மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அணுகியது. இதற்கு அனுமதி அளிக்கலாம் என மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது.

இதையடுத்து சில நிபந்தனைகளுடன் இந்த இடத்தை மாநகராட்சி தர உள்ளது. இங்கு 85 கோடி ரூபாய் செலவில் வேளாண்மை விற்பனை வாரியம் அமைக்கும். இதில் கிடைக்கும் வருவாயில் 5 சதவீதத்தை பராமரிப்பு பணிக்காகவும் மீதமுள்ள 95 சதவீதத்தில் 15 சதவீதத்தை வேளாண்மை விற்பனை வாரியமும் 85 சதவீதத்தை மாநகராட்சியும் பகிர்ந்துகொள்வது என முடிவு

செய்யப்பட்டுள்ளது. 33 ஆண்டுகளுக்கு வாரியம் வசம் இருக்கும் இடம், அதன் பிறகு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும்.நிபந்தனைகள்: இடத்தை தர மாநகராட்சி சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அவை:நில உரிமம், தொடர்ந்து மாநகராட்சி வசம் இருக்கும். எக்காரணம் கொண்டும் நில உரிமம் மாற்றம் செய்ய இயலாது.கட்டட வரைபட அனுமதியை மாநகராட்சியிடம் பெற வேண்டும்.

மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே கடைகளுக்கான வாடகை உயர்த்தப்பட வேண்டும்.மாநகராட்சிக்கு கொடுக்கப்பட வேண்டிய குத்தகை தொகையை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயிக்கப்பட வேண்டும்.கட்டடம் கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை, பராமரிப்பு போன்றவற்றை வாரியமே செய்துகொள்ள வேண்டும்.பொதுப்பணித்துறையின் விதிமுறைகளின் படி, கட்டடம் கட்டப்பட வேண்டும். இவ்வாறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் பற்றி கேள்விப்பட்டதும், மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட் வியாபாரிகள் மத்தியில், "சென்ட்ரல் மார்க்கெட்டை மாற்றப் போகின்றனர்' என வதந்தி பரவியது.கமிஷனர் செபாஸ்டின் கருத்து: தற்போதுள்ள சென்ட்ரல் மார்க்கெட்டிற்கும், அவனியாபுரம் வேளாண் விளைபொருள் அங்காடிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அது, மத்திய அரசின் நிதி உதவியின் கீழ் அமைக்கப்படும் புதிய அங்காடி வளாகம்,என்றார்.

**விதை உற்பத்தி லாபகரமான தொழில்நெல்லை விதைச்சான்று அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2010,01:32 IST

ஆழ்வார்குறிச்சி:விதை உற்பத்தி தொழில்நுட்பம் குறித்து நெல்லை விதைச்சான்று உதவி இயக்குநர் கிருஷ்ணகுமாரி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:தமிழகத்தில் தற்பொழுது நெல் அதிகமாக பயிரிடப்படுகிறது. இருப்பினும் நாம் ஒவ்வொரு பருவத்திலும் அறுவடை செய்த நெல்லையே விதையாக உபயோகித்து வருகிறோம். அந்த விதைகள் நல்ல தரமானவைதானா என்பதை பெரும்பாலும் நாம் அறிவதில்லை. இவ்வாறு ஒவ்வொரு பருவத்திலும் எடுக்கப்பட்ட நெல் மணிகளையே தொடர்ந்து விதையாக பயன்படுத்துவதால் அவற்றின் வீரியம் குறைந்து விளைச்சல் வெகுவாக பாதிக்கப்படுகிறது. மேலும் நடவின்போது அதிக விலை கொடுத்து வெளியிலிருந்து தரம் நிச்சயக்கப்படாத விதைகளை வாங்கும் சூழ்நிலைக்கு ஆளாக நேரிடுகிறது. இந்த நிலைமை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும்.

விதை ஒரு உயிருள்ள இடுபொருள். இது தானியங்களில் இருந்து மாறுபட்டவை. விதைகள் விஞ்ஞான உத்திகளை பயன்படுத்தி தானியங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. குறிப்பாக கலவன் எடுத்தல், சுத்தம் செய்தல், இனத்தூய்மை, புறத்தூய்மை, நல்ல முளைப்புத்திறன் கொண்டதாக கண்காணிக்கப்பட்டு உற்பத்தி செய்து சான்று விதைகளாக விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது.நெல்லை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 675 மெட்ரிக் டன் சான்று விதைகள் உற்பத்தி செய்து அரசு மற்றும் தனியார் மூலம் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு தானிய உற்பத்தியை பெருக்க வேண்டும். அதனால் விதை தேவையும் பல மடங்கு அதிகரித்து வருகிறது.சான்று விதை உற்பத்தி செய்யும் எளிய தொழில்நுட்பத்தை தெரிந்து கொண்டால் நீங்களும் விதை உற்பத்தியாளராகலாம். விதை உற்பத்தி என்பது தானியத்தை தரமான விதைகளாக்கி மதிப்பு கூட்டும் செயல்முறை ஆகும். இதற்கு முதலில் கருவிதை அதாவது வேளாண்மை வல்லுநர்கள் உற்பத்தி செய்த விதைகளை பயன்படுத்த வேண்டும் அல்லது வல்லுநர் விதையில் இருந்து உற்பத்தி செய்த ஆதாரநிலை விதைகளை பயன்படுத்தி சான்று விதைகள் உற்பத்தி செய்யலாம்.முதலில் தாங்கள் வாங்கும் விதைக்கு கருவிதை அல்லது ஆதார விதைக்கு பட்டியல் வாங்க வேண்டும்.

பின் நாற்றங்கால் தயார் செய்து நடவு செய்தபின் கருவிதை அட்டை அல்லது ஆதார விதை அட்டையுடன் வாங்கிய பட்டியல் இணைக்கப்பட்டு விதைப்பறிக்கையுடன் விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.அதன் அடிப்படையில் விதைச்சான்று அலுவலர்கள் வயல் ஆய்வு மேற்கொண்டு விதைத்தரம் பேணப்பட்டு, தரமான சான்று விதைகளாக உற்பத்தி செய்யப்படும். இதனால் தானியமாக கிடைக்கும் மதிப்பை விட ஒருமடங்கு அதிக லாபம் பெறலாம். மேலும் இது சம்பந்தமாக ஆலோசனை பெற விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகம், 32 வடக்கு ராஜராஜேஸ்வரி நகர், என்.ஜி.ஓ.பி.காலனி, நெல்லை மாவட்டம், தொலைபேசி எண்:0462-2554451 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.இவ்வாறு நெல்லை விதைச்சான்று உதவி இயக்குநர் கிருஷ்ணகுமாரி தெரிவித்தார்.

## ***குறுகிய கால அடிப்படையில் உருளைக்கிழங்கு விலையில் கடும் ஏற்ற, இறக்கம் நிலவும்***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
கொல்கத்தா / சண்டிகார்

தேவை மற்றும் அளிப்பில் உள்ள இடைவெளி காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் உருளைக்கிழங்கு விலையில் ஏற்ற, இறக்கம் காணப்படுகிறது. கிழக்கு மாநிலங்களில் அறுவடை தாமதமானதால் அங்கு உருளைக்கிழங்கு விலை உயர்ந்துள்ளது. அதேசமயம், வடக்கு மற்றும் மேற்கு பகுதி மாநிலங்களில் விலை குறைந்துள்ளது. எனவே குறுகிய கால அடிப்படையில் விலையில் ஏற்றத் தாழ்வுகள் நிலவும் என தெரிகிறது.

பஞ்சாப்

பஞ்சாபில் உள்ள விவசாயிகள் புக்ராஜ் மற்றும் ஜோதி வகை உருளைக்கிழங்கிற்கு குவிண்டாலுக்கு ரூ.250–300 என்ற அளவில் பெறுகின்றனர். சென்ற செவ்வாய்க்கிழமை அன்று, ஜலந்தர் மண்டியில் விலை ரூ.260–320 என்ற அளவில் இருந்தது. இது, சில்லரை விற்பனைச் சந்தையில் ஒரு கிலோ ரூ.5–7 ஆக இருந்தது. அதாவது, 100 கிலோ ரூ.500–700 ஆகும்.

மேற்கு வங்காளத்தில், சில்லரை விற்பனையில், ஜோதி வகை உருளைக்கிழங்கின் விலை ஒரு கிலோ ரூ.9–10 ஆகவும், சந்திரமுகி வகை ரூ.12–ஆகவும் உள்ளது. இம்மாத தொடக்கத்தில், இங்கு ஒரு குவிண்டால் உருளைக்கிழங்கின் விலை ரூ.600–ஆக இருந்தது. பஞ்சாபில், குளிர்பதன கிடங்குகளிலிருந்து, வடகிழக்கு மாநிலங்களுக்கு அனுப்பப்படும் உருளைக்கிழங்கின் அளவு, கடந்த ஆண்டை விட 40 சதவீதம் குறைந்துள்ளது.

நம் நாட்டில், உருளைக்கிழங்கு உற்பத்தியில் மேற்கு வங்காளம் இரண்டாவது இடத்தில் உள்ளது. தற்போது இம்மாநிலத்தில் உள்ள குளிர்பதன கிடங்குகளில் 1.50–2 லட்சம் டன் உருளைக்கிழங்கு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இது விற்பனைக்கு வரவேண்டியதாகும். சேமிப்பு செலவினம் அதிகமாக உள்ளதால், கிடங்குகளில் இருந்து வரும் உருளைக்கிழங்கு விலை ஒரு கிலோ ரூ.9–10 என்ற அளவில் உள்ளது.

கையிருப்பு

இம்மாதம் 15–ந் தேதிக்குள் குளிர்பதன கிடங்குகளில் கையிருப்பில் உள்ள உருளைக்கிழங்கு விற்பனைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தவிர்க்க முடியாத சில காரணங்களால் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக,

குளிர்பதன கிடங்கு உரிமையாளர்கள் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.15 அதிகரித்துள்ளனர் என கொல்கத்தாவைச் சேர்ந்த உருளைக்கிழங்கு மற்றும் வெங்காய வியாபாரிகள் சங்கச் செயலாளர் கவுதம் சின்ஹா தெரிவித்தார்.

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 12.13%–ஆக அதிகரிப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
டிசம்பர் 11–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 12.13 சதவீதமாக அதிகரித்துள்ளது. கடந்த ஒரு சில வாரங்களாக ஒற்றை இலக்கத்தில் இருந்த இப்பணவீக்கம், பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள்கள் விலை உயர்வால் மீண்டும் இரட்டை இலக்கத்திற்கு உயர்ந்துள்ளது. டிசம்பர் 4–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இது 9.46 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், காய்கறிகள், பால் பொருள்கள், எரிபொருள்கள், மீன் மற்றும் ஊறுகாய் வகைகள் விலை மிகவும் அதிகரித்திருந்தது. குறிப்பாக, வெங்காயத்தின் விலை, சென்ற ஆண்டின் இதே காலத்தை விட 33.48 சதவீதம் அதிகரித்துள்ளது. இது, வார அடிப்படையில் 4.56 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள் மற்றும் பால் பொருள்கள் விலை முறையே 20.15 சதவீதம் மற்றும் 17.83 சதவீதம் அதிகரித்திருந்தது.
பெட்ரோல் விலை உயர்ந்ததால் எரிபொருள்களுக்கான குறியீட்டு எண் 10.74 சதவீதமாக உயர்ந்தது.
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பொதுப் பணவீக்க விகிதம், சென்ற நவம்பர் மாதத்தில் 7.48 சதவீதமாக குறைந்திருந்தது. இது, அக்டோபர் மாதத்தில் 8.58 சதவீதமாக இருந்தது.

## வெங்காயத்தை தொடர்ந்து வெள்ளை பூண்டு விலை ரூ.290–ஆக அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
அகமதாபாத்
கடந்த ஒரு சில தினங்களாக, நாடு தழுவிய அளவில், வெங்காயத்தின் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்திருந்தது. இந்த நிலையில், இதே குடும்பத்தைச் சேர்ந்த வெள்ளை பூண்டின் விலையும், 'உனக்கு நான் எந்த விதத்திலும் சளைத்தவன் அல்ல'

என்பது போன்று அண்மைக் காலமாக கடுமையாக உயர்ந்துள்ளது.
வரத்து குறைவு
அகமதாபாத் மொத்த விலை சந்தையில், ஒரு கிலோ பூண்டின் விலை ரூ.290–ஆக மிகவும் அதிகரித்துள்ளது. பொதுவாக, அகமதாபாத் சந்தைக்கு, நாள் ஒன்றுக்கு ஏழு லாரிகளில் பூண்டு வந்தது. ஆனால், தற்போது இரண்டு லாரிகளில்தான் வருகிறது. குறிப்பாக, புதன்கிழமை அன்று ஒரு லாரியில் கூட பூண்டு வரவில்லை என அகமதாபாத் மொத்த விலைச் சந்தையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.
நடப்பு ஆண்டு ஜூலை வரையில், ஒரு கிலோ பூண்டின் விலை மொத்த விலைச் சந்தையில் ரூ.125 என்ற அளவில் இருந்தது. இது, ஆகஸ்டு மாதத்தில் ரூ.150–ஆகவும், பின்பு 250–ஆகவும் அதிகரித்து, தற்போது ஒரு கிலோ ரூ.290–ஆக மிகவும் உயர்ந்துள்ளது.
மத்திய பிரதேசம்
நம் நாட்டில், மத்தியபிரதேச மாநிலத்தில் மிக அதிக அளவில் பூண்டு விளைகிறது. ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில், பூண்டு பயிரிடப்படுகிறது. இது, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்திலிருந்து சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது. எனவே, விலை மீண்டும் குறைவதற்கு ஒரு மாதத்திற்கு மேல் ஆகும் என வேளாண் விளைபொருள் உற்பத்தி சந்தை குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இறைச்சி ஏற்றுமதியில் இந்தியாவுக்கு 4–வது இடம்

எஸ் சுஜாதா
கோயம்புத்தூர்
சர்வதேச அளவில் எருமை மாட்டிறைச்சி ஏற்றுமதியில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. உள்நாட்டில் இத்துறையின் சந்தை மதிப்பு ரூ.7,000 கோடியாக உள்ளது. அல்ஜீரியாவில் தற்போது களம் இறங்கியுள்ள ஏற்றுமதியாளர்கள், அடுத்து காமன்வெல்த் குடியரசு நாடுகளை இலக்காகக் கொண்டு செயல்பட உள்ளனர். இதனால் இனி வரும் காலங்களில் இறைச்சி ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
கடந்த ஆண்டுகளில்...
கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவிலிருந்து ரூ.3,550 கோடிக்கு இறைச்சி ஏற்றுமதியானது. இது, 2008–09–ஆம் நிதி ஆண்டில் ரூ.4,840 கோடியாக அதிகரித்தது. நடப்பு நிதி ஆண்டில் ஏற்றுமதி மேலும் வளர்ச்சி அடையும் இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். தற்போது இந்தியாவிலிருந்து ஆண்டுக்கு ஐந்து லட்சம் டன் எருமை இறைச்சி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய நிலையில் நம் நாட்டிலிருந்து 64 நாடுகளுக்கு இறைச்சி ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இவற்றுள் எகிப்து, மலேசியா, சிரியா மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகள் நமது பாரம்பரியச் சந்தைகளாகும். துருக்கி, குவைத், ஓமன் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும் அதிக அளவில் இறைச்சி ஏற்றுமதி செய்யப்படுகிறது. பிரேசிலுடன் ஒப்பிடுகையில் இந்திய இறைச்சியின் விலை குறைவாக உள்ளது. எனவே உலக சந்தையில் அதிக வரவேற்பு காணப்படுகிறது.
போட்டி உருவாகும்

பிரேசில் போன்ற நாடுகள் எதிர்காலத்தில் கடுமையான போட்டியை ஏற்படுத்தக் கூடும் என்பதால், இறைச்சியின் தரத்தைப் பொறுத்தவரை அலட்சியம் காட்டக் கூடாது என ஏற்றுமதி அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் இறைச்சி பயன்பாடு தொடர் வளர்ச்சி கண்டு வருவதால் அளிப்பை விஞ்சி தேவை உயரும் நிலை உள்ளது. அமெரிக்காவில் இத்துறையில் முதலீடுகள் குறைந்து விட்டன. ஆஸ்திரேலியாவில் இறைச்சி உற்பத்தி சரிவடைந்துள்ளது. அதே சமயம் ஐரோப்பிய நாடுகளில் இறைச்சிக்கான தேவை பன்மடங்கு உயர்ந்துள்ளது. இது நமக்கு சாதகமான அம்சம் என்று கூறப்படுகிறது.

# பூண்டு விவசாயம்



கோத்தகிரி பகுதியில் தேயிலைக்கு அடுத்தப்படியாக காய்கறி விவசாயத்திலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தற்போது மழை பெய்து விட்டுள்ளதால் கோத்தகிரி அருகே உள்ள கூக்கல் தொரை பகுதியில் விவசாயிகள் பயிரிட்டுள்ள பூண்டு செடிகள் நன்கு விளைந்துள்ளதை படத்தில் காணலாம்.

# தொடர் மழைக்காலங்களில் காபி செடிகளை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த அறிவுரை

கூடலூர், டிச.24-

தொடர் மழைக் காலங்களில் காபி செடிகளை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த காபி வாரியம் கூடலூர் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

இது குறித்து மத்திய காபி ஆராய்ச்சிநிலைய இயக்குனர் டாக்டர் ஜெயராமா உத்தரவின் பேரில் கூடலூர் காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலர் நிர்மல் டேவிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-



### காபி வெள்ளை தண்டு துளைப்பான்

நடப்பாண்டில் தொடர் மழையின் காரணமாக காபி செடிகளில் வெள்ளைத்தண்டு துளைப்பான் வெளிவருவது குறைந்து காணப்படுகிறது. எனினும் பாதிக்கப்பட்ட செடிகளை கண்டறிதல், அவற்றை வேருடன் அகற்றி அழித்தல் போன்ற சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

தோட்டங்களில் மண் ஈரமாக இருப்பதால் வெள்ளை தண்டு துளைப்பானால் கடுமையாக பாதிக்கப்பட்ட செடிகளில் கூட வாட்டத் திற்கான அறிகுறிகள் காணப் படுவதில்லை. எனவே பாதித்த செடிகளை கண்டறிதலை சரியான முறையில்மிகுந்தகவனத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

### காபி காய்த்துளைப்பான்

தற்போதுநிலவும்ஈரப்பதமான சூழ்நிலையில் காபி காய்த்துளைப்பானின் செயல்பாடு குறைவாக இருக்கும். தொடர் மழையின் காரணமாக வண்டின் பரவுதல் அதிகமாக காணப்பட வில்லை. உலர் களத்தை சுற்றியுள்ள செடிகளின் மகசூலை அறுவடை பருவம் முடியும் வரை வைத்திருக்க வேண்டும்.

ஆனால் செடி களில் பழுத்த காபி பழங்களை அவ்வப்போது பறித்து விட வேண்டும். பழுத்த பழங்களை காலம் தாழ்த்தி பறித்தால் பூச்சி தாக்குதலுக்கு ஆளாக நேரிடும்.

மறுநடவு செய்யப்பட்ட காபி தோட்டங்களில் இளஞ் செடிகளின் வேர் மற்றும் அடித்தண்டு பகுதிகளில் மாவுப்பூச்சிகளின் தாக்கம் காணப்படுகின்றன. மறுநடவு செய்யப்பட்ட தோட்டங்களில் மாவுப்பூச்சிகளின் செயல்பாடு பற்றி கண்காணிக்க வேண்டும். செயல்பாடு இருப்பின் ரோகர் 30 இசி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3.3 என்ற அளவில் கலந்துசெடியின் அடிப்பகுதியை நனைக்க வேண்டும். மாவுப்பூச்சியைகட்டுப்படுத்தும் வரை மாதத்திற்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டும்.

### இலைத்துரு நோய்

செப்டம்பர் மாதம் வரை இலைத்துரு நோயின் தாக்கம் குறைவாக காபி செடிகளில் காணப்பட்டது. அக்டோபர் மாதம் முதல் விட்டு விட்டு மழை, சூரிய வெளிச்சம் மற்றும் அதிக அளவு காற்றின் ஈரப்பதம் ஆகியவற்றால் இலைத்துரு நோயின் தாக்கம் காபி செடிகளில் அதிகரித்து காணப்பட்டது. அக்டோபர் மாதத்தில் தொடர் மழையின் காரணமாக போர்டோ கலவை, பூஞ்சானக்கொல்லி ஆகிய மருந்துகளை சரியான முறையில் தெளிக்க முடியவில்லை. எனவே வரும் மாதங் களில் இலைத்துரு நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் ரகங்களில் நோயின் தாக்கம் தீவிரமடையும்.

தற்போது காபி பழங்கள் பழுத்து வருவதால் ஹெக்ஸகோனசால் அல்லது டிரையடிமிபான் போன்ற ஊடுருவிபாயும் பூஞ்சான கொல்லிகள் தெளிப்பது கூடாது. போர்டோ கலவையை மழை பெய்யும் நேரங்களில் தெளிப் பதை தவிர்க்க வேண்டும். மேலும் காபி செடிகளுக்கு ஆகஸ்ட், செப்டம்பர் மாதம் உரமிடாதவர்கள் தொடர் மழையினால் ஏற்படும் தழைச்சத்து இழப்பை ஈடுகட்ட இந்த வருடம் வழக்கமாக இடப்படும் அளவை விட ஏக்கருக்கு 1 மூடை யூரியா அதிகமாக இட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.